# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 191 /2018

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | :Sathish | Father/ Name: | Perumal |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 08.01.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் பட்டுரில் வசிக்கிறேன். கம்பிகட்டும் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். 2015ம் வருடம் ஒருநாள் எங்கள் பக்கத்து வீட்டுத் தோட்டத்துக்காரரான ராஜா என்பவரின் ஆட்டுக்குட்டி காணாமல் போய்விட்டது. ஆட்டுக்குட்டி பிடித்துச்சென்ற 3 நபர்களை எங்கள் ஊர்க்காரர்கள் பிடித்து மேலூர் காவல் நிலையம் கொண்டு சென்றனர். அதை பார்க்க நான் வந்திருந்தபோது குமார் என்பவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் சின்னையா என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் என்ன சொன்னார் என்று எனக்கு ஞாபகமில்லை. ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள எனது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

அ.சா.1 ராஜா எனக்கு உறவினரா என்றால் ஆமாம், என் மாமா. கம்பிகட்டும் வேலைக்கு வழக்கமாக நான் காலையில் வேலைக்கு சென்றால் மாலையில்தான் திரும்புவேன் என்றால் சரிதான். ஆடு காணாமல் போனது தொடர்பாக நானும் அ.சா.1-ம் சேர்ந்துதான் மேலூர் காவல் நிலையத்திற்கு வந்தோமா என்றால் இல்லை, அவர் முதலில் வந்தார், நான் பின்னால் வந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், பெயர் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் நான் எதிரிகளின் பெயர் மற்றும்

அவர்களின் தகப்பனாரின் பெயர் குறிப்பிட்டு சொல்லியுள்ளது, எனக்கு அவர்களின் பெயர் தெரியாது என்றும், போலீசாரே எழுதிக்கொண்டனர் என்றாலும் சரிதான். வேறு வழக்குகளில் நான் சாட்சியம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் என்னிடம் வெள்ளைத்தாளில் கையெழுத்து பெற்றனர் என்றால் சரிதான். வழக்கு பற்றி தெரியாது என்றாலும், அ.சா.1 என் மாமா என்பதால் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.